**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலன் – 2021–2022–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – அனைத்துக் கிறித்தவப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்தவர்கள் புனிதத் தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டம் – அருட்சகோதரிகள்/ கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.37,000/–லிருந்து ரூ.60,000/–ஆக உயர்த்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிநஆபி1)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.75**

**நாள் 24.11.2021**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ, கார்த்திகை 8**

**படிக்கப்பட்டது:**

1) அரசாணை (நிலை) எண்.120, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 25.12.2011.
2) அரசாணை (நிலை) எண்.50, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 31.08.2018.
3) அரசாணை (நிலை) எண்.6, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 29.01.2021.
4) சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண். பி5/175/2020, நாள் 16.09.2021.

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்காக நிதி உதவி வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தவும், முதற்கட்டமாக 500 கிறித்தவர்களுக்கு நிதி உதவியாக நபர் ஒருவருக்கு ரு.20,000/– வீதம் நிதியுதவி அளித்தும் ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2018–19–ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கையை 500– லிருந்து 600–ஆக உயர்த்தியும், இவற்றில் 50 கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு முன்னுமை அளித்தும் ஆணையிடப்பட்டது.

3. அதனைத் தொடர்ந்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2020-21-ஆம் ஆண்டிலிருந்து மேற்படி புனித பயணம் மேற்கொள்வதற்கான நிதியுதவியினை ரூ.20,000/- லிருந்து ரூ.37,000/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

4. 2021-22-ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> "ஜெருசலேம் புனித பயணத்திற்கு அருட்சகோதரிகள்/ கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் 37,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாயாக 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்"

5. அதனைத் தொடர்ந்து, மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அனைத்துக் கிறித்தவப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்தவர்கள் புனிதத் தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் அருட்சகோதரிகள் / கன்னியாஸ்திரிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் நிதியுதவித் தொகையை ரூ. 37,000/- லிருந்து ரூ.60,000/- ஆக உயர்த்தி வழங்கிடுமாறும், அதனைச் செயற்படுத்தும் பொருட்டு தேவையான கூடுதல் நிதி ரூ.11.50 இலட்சத்தினை 2021-22 - ஆம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டில் உரிய கணக்கு தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்குமாறும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

6. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிறித்தவப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்தவர்கள் புனிதத் தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் அருட்சகோதரிகள் / கன்னியாஸ்திரிகளுக்கு மட்டும் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் நிதியுதவித் தொகையை ரூ. 37,000/- லிருந்து ரூ.60,000/- ஆக உயர்த்தி வழங்குவதற்கு நிருவாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சாரா எண்.52301/நிதி(பி,மிபி(ம)சிந)/2021, நாள் 04.11.2021-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ.கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-5.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.

நகல்:–

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் (ம) வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (பி, மிபி (ம) சிந) துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், பி, மிபி (ம) சிந துறை, சென்னை–9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக எழுத்தர், பி, மிபி (ம) சிந துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/11/21
பிரிவு அலுவலர்